S.P. Krishnamoorthy D.R.E.,
98422 97223
93450 97223
97505 30998
SINCE 1979
Nikon
HARISON Photo Products AUTHORISED SERVICE PROVIDER
FLASH & CAMERA SERVICE
All Brand Digital Cameras, Flash, Umbrella Lights & Lens Service Etc.,
52, Elango Nagar, Sathy Road, ( Near Balaji Meter Service), Gandhipuram Coimbatore - 641 044.
E-mail : nikonflashandcameraservice@gmail.com

RNI (PRGI) No.TNTAM/25/A0208

# உள்ளாட்சி அரசு

தினசரி தமிழ் காலை நாளிதழ்

“இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த வகுத்தலும் வல்ல தரசு” திருவள்ளுவர்

youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

* COIMBATORE திங்கள் நவம்பர் 10 * 2025 * மலர் -1 * இதழ்-162* VOL-1 * ISSUE-162 விலை ரூ.3 * பக்கம் -4



கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட மருத்துவ முகாமில் தூய்மை பணியாளர்கள் நல வாரிய தலைவர் திப்பம்பட்டி வெ.ஆறுசாமி, பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் மதியழகன் , மாவட்ட வருவாய் அலுவலர் சாதனைக்குறள் ஆகியோர் முன்னிலையில் நேரில் பார்வையிட்டு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். அருகில் மாவட்டசுகாதாரஅலுவலர்ரமேஷ்குமார்,பேரூராட்சிதலைவர்அம்சவேணிசெந்தில்குமார் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



நாமக்கல் மாவட்டம், நாமகிரிப்பேட்டை கார்கூடல்பட்டியில் நலம் காக்கும் ஸ்டாலின் முகாம் மாவட்ட கலெக்டர் துர்கா மூர்த்தி தலைமையில் நடைபெற்றது. முகாமை, ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மதிவேந்தன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பயனாளிகளிடம் உடல் நலம் விசாரித்து சிகிச்சை பற்றி கேட்டறிந்தார்.

### வாக்காளர் சிறப்பு திருத்தம்:

# ஸ்டாலின் தலைமையில் மாவட்ட செயலாளர்கள் கூட்டம்!

**★ எம்.பி., எம்.எல்.ஏ.க்கள், தொகுதி பார்வையாளர்கள் பங்கேற்றனர்;**
**★ பணிகளைத் தொடர்ந்து கண்காணிக்க உத்தரவு!!**

சென்னை, நவ.10

மு.க.ஸ்டாலின் தலைமையில் தி.மு.க மாவட்ட செயலாளர்கள் கூட்டம் காணொளி வாயிலாக இன்று நடந்தது. இந்த கூட்டத்தில், வாக்காளர் சிறப்பு திருத்தம் தொடர்பாக ஆலோசிக்கப்பட்டது. இதில், எம்.பி., எம்.எல்.ஏ.க்கள்., தொகுதி பார்வையாளர்கள் பங்கேற்றனர்.

தேர்தல் ஆணையம் ஒவ்வொரு ஆண்டும் வாக்காளர் பட்டியலை புதுப்பித்து வெளியிடுகிறது. ஆனால் பல்வேறு நேரங்களில் அந்தப் பட்டியலில் பிழைகள் இடம்பெறுவது வழக்கம். ஒரே நபரின் பெயர் இரண்டு இடங்களில் இருப்பது, இறந்தவர்கள் பெயர் நீக்கப்படாமல் இருப்பது, புதிய வாக்காளர்கள் சேராமல் விடுவது போன்ற சிக்கல்கள் அடிக்கடி எழுகின்றன.

இந்த பிரச்சினைகளை தீர்க்கும் நோக்கில், இந்திய தேர்தல் ஆணையம் எஸ்.ஐ.ஆர். எனப்படும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் என்ற புதிய நடைமுறையை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் மூலம் அதிகாரிகள் வீடு வீடாகச் சென்று வாக்காளர்களின் விவரங்களைச் சரிபார்த்து, பிழைகள் இருந்தால் திருத்தி, புதுப்பிக்கப்பட்ட வாக்காளர் பட்டியலை உருவாக்குகிறார்கள்.

இந்தப் பணியில் ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் ஒரு பூத் லெவல் அதிகாரி (பிஎல்ஓ) நியமிக்கப்படுகிறார். அவர்கள் நேரடியாக வாக்காளர்களைச் சந்தித்து குடியுரிமைச் சான்றிதழ்களைப் பரிசோதிப்பார்கள். தேர்தல் ஆணையம் வெளியிட்ட வழிகாட்டுதலின்படி, பிறப்புச் சான்றிதழ், கல்விச்சான்றிதழ், பாஸ்போர்ட் போன்றவை மட்டும் குடியுரிமை ஆதாரங்களாக ஏற்றுக்கொள்ளப்படும். ஆனால் ஆதார், பான், ரேஷன் கார்டு போன்றவை இதற்கான சான்றாக ஏற்றுக்கொள்ளப்படாது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கு எதிராக தமிழகத்தில் தி.மு.க. கட்சி ஆரம்பத்திலிருந்தே எதிர்ப்பு தெரிவித்து வருகிறது. சிறப்பு திருத்தத்தின் பெயரில் உண்மையான வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட வாய்ப்பு இருப்பதாகத் தி.மு.க குற்றம்சாட்டியுள்ளது. இதனையடுத்து திமுக தரப்பில் உச்சநீதிமன்றத்தில் வழக்கும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்ப்பு இருந்தபோதும் தேர்தல் ஆணையம் மாநிலம் முழுவதும் சிறப்பு திருத்தப் பணியை தொடங்கியுள்ளது. இதனால் உண்மையான வாக்காளர்கள் பட்டியலில் இருந்து தவறுதலாக நீக்கப்படக் கூடாது என்பதில் தி.மு.க உறுதியாக உள்ளது.

இதற்காக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தமது கட்சி நிர்வாகிகளுக்கும் தொண்டர்களுக்கும் சிறப்பு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார். அதன்படி, கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் தங்கள் பகுதிகளில் வாக்காளர் பட்டியல் திருத்தப்பணியில் பங்கேற்று, வாக்காளர்களுக்கு தேவையான படிவங்கள்நேரம்தவறாமல்சென்றடையவும், சரியாக நிரப்பப்பட்டு பிஎல்ஓவிடம் ஒப்படைக்கப்படவும்உறுதிசெய்யவேண்டும் என கூறப்பட்டுள்ளது.

இந்த நிலையில், வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தம் குறித்து ஆலோசனைக் கூட்டம்,தி.மு.க.தலைவரும்தமிழகமுதல்வர் மு.க. ஸ்டாலின் தலைமையில் இன்று காலை காணொலி காட்சி மூலம் நடைபெற்றது. இதில், தி.மு.க பொதுச்செயலாளர் துரைமுருகன், துணைப் பொதுச்செயலாளர்கள், மாவட்டச் செயலாளர்கள், எம்.பி., எம்.எல்.ஏ.க்கள்., தொகுதி பார்வையாளர்கள் பங்கேற்றனர்.

இந்தக் கூட்டத்தில் வாக்காளர் பட்டியல் திருத்தம் தொடர்பாக தி.மு.க மேற்கொள்ள வேண்டிய அடுத்தக் கட்ட நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆலோசிக்கப்பட்டு, மத்திய அரசுக்கு எதிராக கண்டன தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### காங்கேயம் அருகே பயங்கரம்:

# கட்டையால் அடித்து மனைவி கொலை!

## கணவன் வெறிச்செயல்!!

காங்கேயம்,நவ.10–

காங்கேயம் அருகே கட்டையால் மனைவி அடித்து கொலை செய்யப்பட்டார்.

இதுதொடர்பாக அவரது கணவரை கைது செய்து போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.





திருப்பூர் மாவட்டம் காங்கேயம் வெள்ளகோவில் அருகே கணபதி பாளையம் அப்பையன் காட்டில் வசித்து வரும் தம்பதியினர் பெரியசாமி (77), புஷ்பாத்தாள்(65). இவர்களுக்கு இரண்டு மகன்கள் உள்ளனர். மூத்தமகன் பரமசிவன் மனநலம் பாதித்து தாய் தந்தையுடன் வசித்து வருகின்றார். இளையமகன்முருகேசன் திருமணம் ஆகி தனியாக வசித்து வருகிறார்.

இந்நிலையில் கோழி, ஆடுகளை வளர்த்து விற்பனை செய்து அதில் வரும் வருமானத்தை மனைவி புஷ்பாத்தாள் கணவருக்கு கொடுப்பதில்லை. இதனால் இருவரிடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டு வந்தது.

இந்த நிலையில் நேற்று இரவு பெரியசாமி, புஷ்பாத்தாள் இருவருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. வாக்குவாதம் முற்றியதில் ஆத்திரமடைந்த கணவன் பெரியசாமி அருகில் கிடந்த கட்டையை எடுத்து மனைவி புஷ்பாத்தாளை சரமாரியாக தாக்கினார். இதில் படுகாயமடைந்த புஷ்பாத்தாள் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார்.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த வெள்ளக்கோவில் காவல் துறையினர் புஷ்பாத்தாள் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக காங்கேயம் அரசு தலைமை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இச்சம்பவம் குறித்து வெள்ளக்கோவில் போலீசார் வழக்குப்பதிவு செய்து மனைவியை கொலை செய்த கணவன் பெரியசாமியை கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.



வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர்சு.முத்துசாமி ஈரோடு திருநகர்காலனி மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் புதிதாக கட்டடப்பட்டுள்ள கூடுதல் பள்ளிக்கட்டிடத்தினை திறந்து வைத்தார். உடன் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், ஈரோடு மாநகராட்சி ஆணையாளர்அர்பித் ஜெயின் உட்பட பலர் உள்ளனர்.





# அ.தி.மு.க .வழக்கறிஞர்கள் பிரிவு ஆலோசனை கூட்டம்!

ராமநாதபுரம் நவ.10

ராமநாதபுரத்தில் அ.தி.மு.க வழக்கறிஞர் பிரிவு ஆலோசனைக் கூட்டம் வழக்கறிஞர் பிரிவு இணைச்செயலாளர் வழக்கறிஞர் கருணாகரன் தலைமையில் நடைபெற்றது. ராமநாதபுரம் மாவட்ட கழகச் செயலாளர் முனியசாமி, அம்மா பேரவை இணைச் செயலாளர் முன்னாள் எம்எல்ஏ ராஜாவர்மன், விருதுநகர் மண்டல தகவல் தொழில்நுட்ப துணை தலைவர் வெண்ணிலா சசிகுமார், எம்ஜிஆர் மன்ற துணைச் செயலாளர் சாமிநாதன், மண்டபம் மேற்கு ஒன்றிய செயலாளர் ஆர்.ஜி. மருது பாண்டியன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. கூட்டத்தில் வழக்கறிஞர் பிரிவின் முக்கியத்துவம் குறித்தும் தேர்தல் காலத்தில் வழக்கறிஞர்களின் சட்டப்பணி கட்சிக்கு மிகவும் கூடுதல் பலமாக இருக்கும் என்றும் மாவட்ட செயலாளர் முனியசாமி வலியுறுத்தி பேசினார். கூட்டத்தில் வழக்கறிஞர் செந்தில்குமார், தகவல் தொழில்நுட்ப மண்டல செயலாளர் சரவணன், கலை பிரிவு மாவட்ட செயலாளர் ராமநாதன், வழக்கறிஞர் முத்துமுருகன், ராமநாதபுரம் வடக்கு ஒன்றிய செயலாளர் கோட்டை சாமி உட்பட பலர் கலந்து கொண்டனர். வழக்கறிஞர் காமராஜர் நன்றி கூறினார்.

# வாக்காளர் பட்டியல் திருத்தப் விண்ணப்ப படிவங்களை அரசியல் கட்சி வாக்குச்சாவடி நிலை முகவர்களிடம் கொடுக்ககூடாது!

## கலெக்டரிடம் அ.தி.மு.க முன்னாள் அமைச்சர்கள் கடம்பூர் ராஜூ எம்.எல்.ஏகள் எஸ்.பி.சண்முகநாதன் மனு!!

தூத்துக்குடி நவ.10

தமிழகத்தில் தற்போது நடைபெற்று வரும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்தம் பணிகளில் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் பணியமர்த்தப்பட்டு தமிழகம் முழுவதும் வீடுவீடாக சென்று விண்ணப்ப படிவம் வழங்கப்பட்டு வருகிறது.

ஒரு மாதம் நடைபெறும் இப்பணியில் பி.எல்.ஒகள் அரசியல் கட்சி சார்பில் நியமிக்கப்பட்டுள்ள பி.எல்.ஏகள் இடம் ஒரு நாளைக்கு 50 விண்ணப்ப படிவத்தை வாக்காளர்களிடம் இருந்து பூர்த்தி செய்து பெறலாம் என அறிவுறுத்தப்பட்டது.

இந்த நடைமுறை முறைகேடுகள் நடைபெற வாய்ப்பாக கூடும் என கருதியும் எஸ்.ஐ.ஆர்யின் நோக்கம் முழுமையாக நிறைவேற வேண்டும் என்றும் அதில் எவ்வித குளறுபடியும் முறைகேடும் நடந்திட கூடாது என்று வலியுறுத்தி அ.தி.மு.க சார்பில் வடக்கு மாவட்ட செயலாளரும், முன்னாள் அமைச்சருமான கடம்பூர் ராஜூ எம்.எல்.ஏ தெற்கு மாவட்ட செயலாளரும், முன்னாள் அமைச்சருமான எஸ்.பி சண்முகநாதன் மற்றும் ஆகியோர் கலெக்டர் இளம்பகவத்தை சந்தித்து மனு அளித்தனர்.

# தூத்துக்குடியில் இருந்து சென்னைக்கு ஆசிரியர் உதவியால் விமானத்தில் பறந்த மாணவர்கள்!

தூத்துக்குடி நவ.10

தூத்துக்குடி அருகே உள்ள பண்டாரம்பட்டி து.ந.தி.அ.க துவக்கப்பள்ளி தலைமை ஆசிரியர் நல்லாசிரியர் நெல்சன் பொன்ராஜ். இவரிடம் கடந்த ஆண்டு மாணவர்கள் தங்கள் தலைக்கு மேலே விமானம் பறக்கிறது. ஆனால் நாங்கள் அதில் ஏற இயலுமா என கேள்வி கணை தொடுத்தனர். எனவே அவர் சுமார் 18 மாணவர்களை தனது செலவில் அழைத்துக்கொண்டு கடந்த வருடம் சென்னைக்கு விமானத்தில் சென்றார். இந்த வருடம் தன்னிடம் படித்து விட்டு சென்ற பழைய மாணவர்கள் நாங்களும் உங்கள் மாணவர்தானே. எங்களுக்கு விமான பயணம் கிடைக்காதா? என்று கேட்க, பழைய மாணவர்கள் 8 பேர் மற்றும் தற்போது படிக்கும் மாணவர்கள் 10 பேர் என 18 மாணவர்களை விமானத்தில் சென்னை அழைத்துச்சென்றார். இவரும், இவருடன் பணியாற்றும் இடைநிலை ஆசிரியை மாரிச்செல்வி, எழுத்தாளர் முத்தாலங்குறிச்சி காமராசு உடன் சென்றனர். காலை 6.30 மணிக்கு தூத்துக்குடி விமான நிலையத்தில் தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவர் இளம்பகவத் சிறப்புரையாற்றி மாணவர்களை வழியனுப்பி வைத்தார். தூத்துக்குடி மாவட்டமுதன்மை கல்வி அலுவலர் சங்கீதா சின்ன ராணி, மாவட்ட கல்வி அலுவலர் தெட்சணாமூர்த்தி, தூத்துக்குடி ஊரக வட்டார கல்வி அலுவலர் மரிய ஜெயசீலா ஆகியோர் உடன் இருந்தனர்.



# மதுரை மாவட்ட குடிநீர், விவசாய தேவைகளுக்காக வைகை அணையில் இருந்து தண்ணீர் திறப்பு!

ஆண்டிபட்டி, நவ. 10,

கடந்த மாதம் பெய்த கன மழையின் காரணமாக ஆண்டிபட்டி அருகே உள்ள வைகை அணை முழு கொள்ளளவை எட்டியது. அணையில் இருந்து மதுரை திண்டுக்கல் மாவட்ட முதல் போகம் மற்றும் ஒரு போக பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்டு வரும் நிலையில், வைகை அணையின் பூர்வீக பாசனப் பகுதிகளான ராமநாதபுரம், சிவகங்கை, மதுரை மாவட்டங்களுக்கு மூன்று கட்டங்களாக தண்ணீர் திறக்க தமிழக அரசு உத்தரவிட்டிருந்தது. அதில் முதல் கட்டமாக ராமநாதபுரம் மாவட்டத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்டது. பின்னர் வைகை அணையின் பூர்வீக பாசன பகுதி 2ல் உள்ள சிவகங்கை மாவட்டத்தின் விவசாய மற்றும் குடிநீர் தேவைக்காக தண்ணீர் திறக்கப்பட்டு நிறுத்தப்பட்டது. விவசாய மற்றும் குடிநீர் தேவைக்காக ஆற்றுப் படுகை வழியாக இன்று முதல் வரும் 13ம் தேதி வரை 6 நாட்களுக்கு 428 மில்லியன் கன அடி தண்ணீரை திறந்து விட அரசு உத்தரவிட்டிருந்தது. அதன்படி காலை 10 மணி அளவில் வைகை அணை பொதுப்பணித்துறை அதிகாரிகள் மதுரை மாவட்டத்திற்கு வினாடிக்கு ஆயிரம் கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டனர். ஆற்றுப்படுகை வழியாக திறக்கப்பட்டுள்ளதால் தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம் ஆகிய ஐந்துமாவட்டமக்கள் ஆற்றில் இறங்குவோ, கால்நடைகள் மேய்க்கவோ கூடாது என பொதுப்பணி துறையினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர். அதே சமயத்தில் மழை இன்றி நீர்வரத்து சரிந்த நிலையில் அணையில் இருந்து கூடுதல் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளதால் வைகை அணையின் நீர்மட்டம் வேகமாக சரியத் தொடங்கியுள்ளது.

# புதிதாக கழிவு நீர் சாக்கடை அமைக்க தோன்றிய குழியில் சிறுவன் தவறி விழுந்து உயிர்தப்பினார்!

கிருஷ்ணகிரி,நவ.10

புதிதாக கழிவு நீர் சாக்கடை அமைக்க தோன்றிய குழியில் மூன்று வயது சிறுவன் தவறி விழுந்து அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார்

கிருஷ்ணகிரி மாவட்டம் கெலமங்கலம் பேரூராட்சிக்கு உட்பட்ட 11 வது வார்டில் தொட்டே காப் பள்ளியில் புதிதாக கழிவு நீர்சாக்கடையை அமைக்க ஜேசிபி எந்திரம் மூலம் குழி தோண்டினர் இதனை அடுத்து கான்கிரீட் மூலம் கழிவுநீர்கால்வாய் அமைத்துள்ளனர். ஜெயலட்சுமி வீட்டின் முன்பு சாக்கடை இருபுறமும் மூன்றடிக்கு மேல் பள்ளம் உள்ளது இதனை மண் கொண்டு மூடாததால் நேற்று பெய்த மழையால் இரண்டு அடிக்கு மேல் தண்ணீர் தேங்கியுள்ளது நேற்று விஜயகுமாரின் மகன் குரு பிரசாத் மூன்று வயது சிறுவன் அந்த இடத்தில் விளையாடிக் கொண்டிருந்த போது தவறி பள்ளத்தில் விழுந்துள்ளார் அதைப் பார்த்த பக்கத்தில் இருந்தவர் அவனைக்காப்பாற்றி உள்ளார். இதனால் அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பினார் இதனை அடுத்து சிறு காயங்களுடன் கெலமங்கலம் அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்றுள்ளனர். மற்றொரு சம்பவம் நடக்காமல் இருக்க மண் கொண்டு மூடி சமம் செய்யுமாறும் அதனை செய்யத் தவறிய பேரூராட்சி நிர்வாகத்தின் மீது நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் கோரிக்கையை வைத்துள்ளனர்





தூத்துக்குடி மாநகராட்சியுடன் இணைந்து வ.உ.சிதம்பரனார் துறைமுக சமூக கூட்டாண்மை பொறுப்பு நிதியின் (CSR) பங்களிப்பில்ரூ.2.38கோடிமதிப்பீட்டில்புதியதாககட்டப்பட்டுள்ள மது மற்றும் போதை மறுவாழ்வு மைய கட்டிடத்தினை மாண்புமிகு தூத்துக்குடி பாராளுமன்ற உறுப்பினர் திருமிகு.கனிமொழி கருணாநிதி அவர்கள், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பி.கீதா ஜீவன் முன்னிலையில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க.இளம்பகவத், தலைமையில் திறந்து வைத்தார்கள். இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு மேயர் பெ.ஜெகன் , தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் திருமதி சி.ப்ரியங்கா, மற்றும் அரசு துறைச் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



# வத்தலகுண்டுவில் பாத சிகிச்சை இலவச தெரப்பி மருத்துவ முகாம்!

வத்தலகுண்டு,நவ.10

வத்தலகுண்டு அருகே உள்ள சேவுகம்பட்டி பேரூராட்சிக்கு உட்பட்ட 11வது வார்டு மேலக்கோவில்பட்டி ரோட்டில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நியூ லைப் பவுன்டெய்ன் டிரஸ்ட் மற்றும் திண்டுக்கல் ஹெல்த்திஃபை வெல்நெஸ் சென்டர் இணைந்து நடத்தும் பாத சிகிச்சை இலவச தெரப்பி மருத்துவ முகாம் நடைபெற்றது. இம்முகாமிற்கு நியூ லைப் பவுன்டெய்ன் டிரஸ்ட் சாலமோன் தலைமை தாங்கினார். சேவுகம்பட்டி பேரூராட்சி 11வது வார்டு கவுன்சிலர் தவபாண்டியன்,

14வது வார்டு கவுன்சிலர் பாலமுருகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிறப்பு விருந்தினராக தொழிலதிபரும், திமுக கிழக்கு ஒன்றிய பொறுப்புக் குழு உறுப்பினருமான ஆரோக்கியசாமி கலந்து கொண்டு குத்துவிளக்கேற்றி மருத்துவ முகாமினை துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார். இம்முகாமில் சர்க்கரை நோய், பாத எரிச்சல், இரத்த சோகை, தைராய்டு, ஆஸ்துமா, சுவாசக்கோளாறு உள்ளிட்ட கீழ்க்கண்ட பிரச்சனைகளுக்கு தீர்வு காணப்பட்டு மருந்து மாத்திரைகள் வழங்கப்பட்டது. இம்முகாமில் 100க்கும் மேற்பட்ட பயனாளிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.





# திருப்பத்தூரில் சீருடை பணியாளர் தேர்வு; அமைச்சுப் பணியாளர்களுக்கு அறிவுரை நிகழ்வு!

திருப்பத்தூர் நவ.10

திருப்பத்தூர் மாவட்டத்தில், திருப்பத்தூர் மாவட்ட காவல் கண்காணிப் பாளர் வி.சியாமளா தலைமையில் தமிழ்நாடு சீருடை பணியாளர் தேர்வு வாரியம் நடத்தும் 2025ம் ஆண்டிற்கான இரண்டாம் நிலை காவலர், சிறை காவலர் மற்றும் தீயணைப்பாளர் பணியிடங்களுக்கு தேர்வு நடைபெற உள்ள நிலையில் தேர்வு பணியில் ஈடுபட உள்ள காவல்துறையினர் மற்றும் அமைச்சுப் பணியாளர்களுக்கு அறிவுரைகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இக்கூட்டத்தில் காவலர் எழுத்து தேர்வு குறித்து காவல்துறையினர் மற்றும் காவல்துறை அமைச்சுப்பணியாளர்கள் மேற்கொள்ளும் பணிகள் குறித்தும், அவர்கள் பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் குறித்தும் திருப்பத்தூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அறிவுரைகள் வழங்கினார்.

# தூத்துக்குடியிலிருந்து சென்னைக்கு பசுமைப் பயண மிதிவண்டி பேரணி!

தூத்துக்குடி நவ.10

தமிழக துறவியர் பேரவை, அய்கஃப் கல்லூரி மாணவர் இயக்கம் மற்றும் தோழமை இயக்கங்கள் இணைந்து குமரி முதல் சென்னை வரையிலான பசுமைப் பயண மிதிவண்டி பேரணி குமரி முதல் சென்னை வரையிலான பசுமைப் பயண மிதிவண்டி பேரணி நவ.5 முதல் 20ம் தேதி வரை நடைபெறுகிறது. தூத்துக்குடியில் பனிமய மாதா கோயில் முன் நடைபெற்ற இப்பேரணி தொடக்க நிகழ்ச்சிக்கு மறை மாவட்ட ஆயர் ஸ்டீபன்தலைமைவகித்து கொடியசைத்துத் தொடங்கிவைத்தார்.

இப்பேரணி பனிமய மாதாகோயில்முன்பிருந்து புறப்பட்டு, ஜார்ஜ் சாலை, தெற்கு காட்டன் சாலை, மேற்கு காட்டன் சாலை, கடற்கரைச் சாலை, மரியன்னை கல்லூரி, பூபாலராயர் புரம், இஞ்ஞாசியார் புரம் மற்றும் மாப்பிள்ளையூரணி விலக்கு வழியாக சாத்தூரை நோக்கிச் சென்றது.

இதனை முன்னிட்டு தூய மரியன்னை கல்லூரி மாணவிகள் காலை யில் முத்துநகர் கடற்கரையைத் தூய்மை செய்தனர். 1500 விதைப் பந்துகளும், 1000 மஞ்சள் பைகளும், 500 மரக்கன்றுகளும், 500 விதை பாக்கெட்டுகளும் மக்களுக்கு வழங்கப்பட்டன.

முன்னதாக, மாவட்ட துறவியர் பேரவைத் தலைவரும், புனித பிரான்சிஸ் சவேரியார் மேல்நிலைப் பள்ளியின் அதிபருமான மரிய சிங்கராயர் வரவேற்றார். பேரணியின் நோக்கம் குறித்து தமிழகத் துறவியர் பேரவையின் தலைவர் மரிய பிலோமி பேசினார். மறைமாவட்ட துறவியர் பேரவையின் பொருளாளர் அன்பு சுற்றுச்சூழல் காக்க உறுதிமொழி வாசித்தார்.

வீராங்கனை இயக்கம் நிறுவனர் பாத்திமா பாபு நிறைவுரை நிகழ்த்தினார். நிகழ்ச்சிகளை நெய்தல் அண்டோ தொகுத்து வழங்கினார்.

துறவியர் பேரவையின் துணைத் தலைவரும், தூய மரியன்னை கல்லூரியின் முதல்வருமான ஜெஸ்ஸி நன்றி கூறினார். தூத்துக்குடியில் மகிளா காங்கிரஸ் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

# மேலூர் நகராட்சி அறிவுசார் மையத்தில் படித்த 4 பேர் அரசு பணிக்கு தேர்வு!

மேலூர் நவ.10

தமிழக அரசு ஒவ்வொரு மாவட்டத்திலும், அறிவுசார் மையத்தினை ஏற்படுத்தி அரசு போட்டி தேர்வுகளுக்கு கிராமப்புற, நகர்ப்புற மாணவர்களும் தயாராகும்படி பயிற்சியை அளித்து வருகிறது. மேலூர் நகராட்சியில் உள்ள அறிவுசார் மையத்தில் போட்டித் தேர்வுகளுக்கு தயாராகும் மாணவர்களின் தேவைகளுக்கு பல்வேறு புத்தகங்கள், கம்ப்யூட்டர் வசதி, ஆன்லைன் வசதி, ஸ்மார்ட் வகுப்பறைகள், சுத்தமான குடிநீர், படிக்கும் மேசை, படிக்கும் அறை, நூலகம் உள்ளிட்ட பல்வேறு வசதிகள் உள்ளன.



இதனால் மேலூர் நகர் மற்றும் சுற்று வட்டாரத்தை சேர்ந்த டிஎன்பிஎஸ்சி யுபிஎஸ்சி உள்ளிட்ட போட்டி தேர்வு எழுதும் 100 மாணவ மாணவியர்கள் தினசரி படித்து வருகின்றனர். இந்த மையம் காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை தொடர்ந்து அறிவு சார் மையம் செயல்பட்டு வருகிறது.

நடந்து முடிந்த குரூப் 4 தேர்வில் மேலூர் பகுதிகளை சேர்ந்த பாரதியார்புரம் அர்ச்சனா, சொக்கம் பட்டி பிரியதர்ஷினி, கஸ்தூரிபாய் நகர் மைதீன் அப்துல் காதர், ஆர்.சி.சர்ச் ரோடு முகமது ரகுமான் ஆகியோர் குரூப் 4 தேர்வில் தேர்ச்சி பெற்று அரசு பணிக்கு தேர்வாகியுள்ளனர்.

விரைவில் இவர்கள் அரசு பணியில் அமர்த்தப் பட உள்ளனர்.

# பரமக்குடி எம்எல்ஏ செ.முருகேசன் மருத்துவ முகாமை துவக்கி வைத்தார்!

பரமக்குடி,நவ.10

பரமக்குடி எம்எல்ஏ செ.முருகேசன் மருத்துவ முகாம் துவக்கிவைத்தார்! மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் மூலம் நலம் காக்கும் ஸ்டாலின் பல்நோக்கு உயர் சிறப்பு மருத்துவ முகாம் பரமக்குடி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பரமக்குடி எமனேஸ்வரம் எஸ் என் வி அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற முகாமை பரமக்குடி எம்எல்ஏ செ.முருகேசன் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார் இந்நிகழ்வில் பரமக்குடி நகர் மன்ற தலைவர் சேது கருணாநிதி, நகர் மன்ற துணைத்தலைவர் குணா. வடக்கு நகர கழக செயலாளர் ஜீவரத்தினம், மாவட்ட சுகாதார அலுவலர் பொற்செல்வன், வட்டார மருத்துவ அலுவலர் சுகந்தி போஸ், மாவட்ட மலேரியா அலுவலர் ரமேஷ், பூச்சியியல் அலுவலர் பாலசுப்பிரமணியன், மருத்துவ அலுவலர்கள் பிரதீபா, மற்றும் நகர மன்ற உறுப்பினர்கள் தேவகிட்டு, குபேந்திரன், சீனிவாசன், மற்றும் மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் ஐலுக் சண்முகம், நகர் துணைச் செயலாளர் மணி, நகர் வடக்கு நகர இளைஞரணி அமைப்பாளர் ராஜா, நெசவாளர் அணி சந்திரசேகர், கணேஷ் பாபு, ராஜன், கோவிந்தன் மற்றும் வார்டு செயலாளர்கள் கஜேந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



பரமக்குடி எம்எல்ஏ செ.முருகேசன் மருத்துவ முகாம் துவக்கி வைத்தார்!

Owned, Printed and Published by N. JAYAPRAKASH printed at Ali Mohamed Sayeed Offset Printers NO.29, V.N. DASS ROAD, BORDER THOTTAM, MOUNT ROAD Chennai 600002.
Published from Old No. 73/C 13 Nagaratchi cleaners colony, Housing unit, south ukkadam Coimbatore641 001. Editor: N.JAYAPRAKASH



## வடச்சேரி அரசு தொடக்கப் பள்ளியில்

# ஊராட்சியில் உள்ள அரசு தொடக்கப் பள்ளியில் பள்ளி பெற்றோர் குழுக் கூட்டம்!

ஆம்பூர், நவ.10

ஆம்பூர் அருகே உள்ள வடச்சேரியில் இயங்கி வரும் அரசு தொடக்கப் பள்ளியில்,

மேலாண்மைக் குழு மற்றும் பெற்றோர் குழுக் கூட்டம் நடைபெற்றது.

இதில் பள்ளி தலைமை ஆசிரியர் தலைமை வகித்தார். ஊராட்சி மன்றத்தலைவர்மற்றும்பள்ளி மேலாண்மைக் குழுத் தலைவர் முன்னிலை வகித்தனர்.

சிறப்பு அழைப்பாளராக வேளாண்மை துறையில் பணியாற்றி ஓய்வு பெற்ற வடச்சேரி அண்ணாதுரைகலந்துகொண்டு சிறப்பித்தார்.

தலைமை ஆசிரியர் பள்ளியின் வளர்ச்சி பற்றியும் மாணவர்கள் திறனை பற்றியும் எடுத்துரைத்தார். மாணவர்களின் பெற்றோர் மாணவர்கள் பெற்ற மதிப்பெண்கள் மற்றும் அவர்களின் திறமையை பற்றி விவாதித்தனர்.

பள்ளி ஆசிரியர்கள் மாணவர்களின் பெற்றோரிடம் விவாதித்தனர். பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். முடிவில், பள்ளி ஆசிரியர் சுமித்ரா நன்றி கூறினார்.

# உலக செஸ் சாம்பியன் குகேஷ் தலைமையில் மில்க் பிக்கிஸ் ஸ்மார்ட் வெளியீடு!

திருச்சி.நவ.10

பிரிட்டானியா இண்டஸ்ட்ரீஸ் தனது பிரபலமான மில்க் பிக்கிஸ் வரிசையை விரிவுபடுத்தி, இந்தியாவின் முதல் DHA மற்றும் 16 நுண்ணூட்டச்சத்துக்களால் செறிவூட்டப்பட்ட பிஸ்கட் வரவில்லான 'மில்க் பிக்கிஸ் ஸ்மார்ட்' தயாரிப்பை அறிமுகப்படுத்தியுள்ளது. 100% கோதுமை மாவினால் தயாரிக்கப்பட்ட இந்த பிஸ்கட், சிறார் அறிவாற்றல் வளர்ச்சியை ஊக்குவிக்க உதவும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த அறிமுக நிகழ்ச்சியில் பங்கேற்ற உலக செஸ் சாம்பியன் குகேஷ் டொம்மராஜு, இந்தப் புதிய தயாரிப்பு இளம் தலைமுறையினரின் சிந்தனை, கவனம் மற்றும் செயல்திறனை மேம்படுத்த உதவும் எனக் குறிப்பிட்டார். "செஸைப் போல, ஆரம்பத்தில் எடுக்கும் சிறிய முடிவுகளே வாழ்க்கையின் பெரிய வெற்றிகளுக்கு வழி வகுக்கின்றன. மில்க் பிக்கிஸ் ஸ்மார்ட்டுடன் இணைவதில் நானும் மகிழ்கிறேன்," என்றார்.

பிரிட்டானியா நிறுவனத்தின் தலைமை மேம்பாடு மற்றும் தர அலுவலர் சுதிர்நேமாஅவர்கள், "தமிழகத்தில் மில்க் பிக்கிஸ் எப்போதும் குடும்பங்களின் நம்பகத் தன்மையைக் கட்டியெழுப்பி வருகிறது. குழந்தைகளின் வளர்ச்சி, ஆரோக்கியம் மற்றும் நல் வாழ்வை முன்னிறுத்தும் தயாரிப்புகளை வழங்கும் எங்கள் முயற்சியில் மில்க் பிக்கிஸ் ஸ்மார்ட் ஒரு முக்கிய முன்னேற்றமாகும்" எனத் தெரிவித்தார். புதிய தயாரிப்பு இப்போதுதமிழகம் முழுவதும் ரீடெயில் கடைகளிலும் பிக் பாஸ்கெட்டிலும் கிடைக்கிறது.



கோயம்புத்தூர் மாவட்டம், (122 கிணத்துக்கடவு சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட வெள்ளலூர் ஹவுசிங் யூனிட் பகுதியில், வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர திருத்தப் பணிகளான வாக்குச் சாவடி நிலை அலுவலர்கள் வாக்காளர்களின் இல்லத்திற்கு சென்று கணக்கெடுப்பு படிவம் வழங்கும் பணியினை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் .பவன்குமார் க.கிரியப்பனவர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் வட்டாட்சியர் (மதுக்கரை . வேல்முருகன், வாக்குச்சாவடி நிலைய அலுவலர்கள் உட்பட பலர் உள்ளனர்.

## ஆம்பூர் அருகே

# உணவு தேடி வந்த ஊருக்குள் வந்த புள்ளி மானை நாய்கள் கடித்ததால் உயிரிழப்பு!



ஆம்பூர். நவ.10

திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர்அடுத்தமிட்டாளம் ஊராட்சி குட்டகந்தூர் கிராமம் மலை அடிவாரத்தில் கோபி என்பவருக்கு சொந்தமான விவசாய நிலத்தில்

உணவு தேடி வந்த புள்ளி மானை நாய்கள் துரத்தி கடித்ததில் மான் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளது.

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற ஆம்பூர் வன அலுவலர் பாபு தலைமையிலான வனத்துறையினர் உயிரிழந்த மானை மீட்டு கரும்பூர் பகுதியில் உள்ள கால்நடை மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டு விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஜி.ஆர்.டி ஹோட்டல் – கிராண்ட் மதுரையில் "சௌராஷ்டிரா சுவை" பாரம்பரிய சமையல் திருவிழா!



மதுரை, நவ.10–

ஜிஆர்டி ஹோட்டல்நிர்வகிக்கும் கிராண்ட் மதுரை, தனது பஜார் உணவகத்தில் "சுவை ஆப் சௌராஷ்டிரா – பாரம்பரிய சமையல் திருவிழா"வை நவம்பர் 7 முதல்16 வரைநடக்கிறது. சௌராஷ்டிரா சமூகத்தின் பாரம்பரிய உணவு சுவைகள் வெளிப்படுத்தும் வகையில், பிரபலமான செஃப் அருணா ரமேஷ் மற்றும் செலிபிரிட்டி செஃப்ராகவன்இணைந்து இந்த மெனுவை வடிவமைத்துள்ளனர்.

மதுரையின் சௌராஷ்டிரா சமூகத்தின் தனித்துவமான சமையல் கலாசாரத்தை உணர்ச்சியுடன் விருந்தினர்களுக்கு அனுபவிக்கச் செய்வதே விழாவின் நோக்கம்.

இந்த உணவுத் திருவிழா, திருமலை நாயக்கர் கால சுங்குடி கைநெசவு பாரம்பரியத்திலிருந்து உருவான சௌராஷ்டிரா சமூகத்தின் கலாசார சிறப்பை கொண்டாடுகிறது. வட இந்திய மசாலா மணங்களும் தென்னிந்திய நறுமண சுவைகளும் கலந்த தனித்துவமான உணவு சுவை தலைமுறைகளாக பரம்பரையாக பரவி வந்துள்ளது.

இந்த பாரம்பரிய உணவு வகைகளை அனுபவமிக்க செஃப்கள் அசல் சமையல் முறையில் சமைத்து வழங்கும் அனுபவத்தை விருந்தினர்கள் பெறலாம் என கிராண்ட் பை ஜிஆர்டி ஹோட்டல் சீனியர் கிளஸ்டர் ஜெனரல் மேனேஜர் திரு. இளங்கோ ராஜேந்தர் தெரிவித்தார்.

பஜார் உணவகம், பாரம்பரிய சுங்குடி சேலைகள், கைத்தறி சறுக்கா மாதிரி, பித்தளைப் பாத்திரங்கள், மண் விளக்குகள் மற்றும் திருமலை நாயக்கர் அரண்மனையின் வரலாற்றுப் புகைப்படங்கள் ஆகிய அலங்காரங்களுடன் பண்பாட்டு அரங்கம் மாற்றப்பட்டுள்ளது.

பாரம்பரிய குத்துவிளக்கின் ஒளி, மக்கள் இசை பின்னணி, சௌராஷ்டிர நெசவாளர் உடையணிந்த பணியாளர்கள் ஆகியவை உணவு அனுபவத்தை மேலும் உயர்த்துகின்றன. சுவை பிரியர்களும் வரலாற்று ஆர்வலர்கள் தவறாமல் அனுபவிக்க வேண்டிய விழாவாக இது அமைகிறது.



# வீரமாமுனிவர் சிலைக்கு அமைச்சர் கீதாஜீவன் மரியாதை!

காமநாயக்கன்பட்டி, நவ.10

வீரமாமுனிவர் சிலைக்கு அமைச்சர் கீதாஜீவன் மரியாதை செலுத்தினார்.

தமிழ்நாடு அரசு சார்பில் தமிழ் வளர்த்த இத்தாலியப் பேரறிஞர் வீரமாமுனிவர் 345வது பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு காமநாயக்கன்பட்டியில் அமைந்துள்ள மணிமண்டபத்தில் உள்ள திருவுருவச் சிலைக்கு இன்று 8.11.25 சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் கீதா ஜீவன் ,மாவட்ட ஆட்சித்தலைவர் இளம்பகவத், ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். புனித பரலோக மாதாபசலிகாபங்குதந்தை மோயிஸ்அவர்கள்,கயத்தார் வட்டாட்சியர் அப்பனராஜ் மற்றும் பலர் உடன் உடனிருந்தனர்.

# பந்தன் மியூச்சுவல் ஃபண்ட் அறிமுகம்; பந்தன் ஹெல்த்கேர் ஃபண்ட் !

சென்னை,நவ.10

பந்தன் மியூச்சுவல் ஃபண்ட், சுகாதாரம், மருந்து மற்றும் அதனுடன் தொடர்புடைய துறைகளில் முதலீடு செய்யும் முடிவில்லா பங்குத் திட்டமான பந்தன் ஹெல்த்கேர் ஃபண்டை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த ஃபண்ட் இந்தியாவின் விரிவடைந்து வரும் மருத்துவத் துறையின் வாய்ப்புகளைப் பயன்படுத்தும் நோக்கில் செயல்படுகிறது,




இதில் மருத்துவமனைகள், டயக்னொஸ்டிக்ஸ், மருந்துகள், உயிரியல் தொழில்நுட்பம், நலத் துறை மற்றும் ஹெல்த் டெக் உள்ளிட்ட துறைகள் அடங்கும். புதிய ஃபண்ட் ஆஃபர் (NFO) 10 நவம்பர் 2025 அன்று தொடங்கி 24 நவம்பர் 2025 அன்று முடிகிறது.

விஷால் கபூர் – பந்தன் ஏஎம்சி தலைமை நிர்வாக அதிகாரி, கூறுகையில்: "சுகாதாரத் துறை நீடித்த வளர்ச்சிக்கான முக்கிய இயந்திரம். இந்தியாவில் மக்கள்தொகை மாற்றம், வருமான உயர்வு மற்றும் காப்பீட்டு விரிவாக்கம் சுகாதாரச் செலவுகளை அதிகரிக்கிறது. இதன் மூலம், பந்தன் ஹெல்த்கேர் ஃபண்ட் முதலீட்டாளர்களுக்கு நீண்டகால கட்டமைப்பு வளர்ச்சியில் பங்குபெற ஒரு ஒழுக்கமான மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட வழியை வழங்குகிறது."

விராஜ் குல்கர்ணி – நிதி மேலாளர், கூறியதாவது: "மருத்துவத் துறை பரந்த வாய்ப்புகளை கொண்டது. பந்தன் ஹெல்த்கேர் ஃபண்ட் மருத்துவமனைகள் & டயக்னொஸ்டிக்ஸ், CDMO & API, ஏற்றுமதி ஜெனெரிக்ஸ், உள்நாட்டு பிராண்டு மருந்துகள் என நான்குதலைப்புகளில் பங்குகளைப் பரவலாகக் கொண்டிருக்கும். அடிப்படை ரீதியாக வலுவான, நிலையான லாபத்துடன் கூடிய நிறுவனங்களில் முதலீடுசெய்யும்கீழிருந்து மேல் நோக்கிய (bottomup) அணுகுமுறையைக் கடைப்பிடிக்கும்."

# தூத்துக்குடி மாவட்ட கிரிக்கெட் வீரர்களுக்கான தேர்வு!

தூத்துக்குடி, நவ.10

தமிழ்நாடு கிரிக்கெட் சங்கம் நடத்தும் SS ராஜன் கோப்பை20252026க்கான தூத்துக்குடி மாவட்ட கிரிக்கெட் வீரர்கள் தேர்வு செய்யப்படவுள்ளது.

தேர்வு நடைபெறும் நாள் 15.11.2025 சனிக்கிழமை காலை 7 மணி அளவில் தூத்துக்குடி பெரிசன் பிளாசா எதிரே அமைந்துள்ள JMJ கிரிக்கெட் பயிற்சி மையத்தில் வைத்து நடைபெறும் என்பதைதூத்துக்குடி மாவட்ட கிரிக்கெட் சங்க செயலாளர் திரு கிறிஸ்பின் தெரிவித்துள்ளார்.

தகுதிகள் :

வீரர்கள் 01.09.1985 அன்றோஅதற்குபின்னரோ 31.08.2012 அன்றோ அதற்கு முன்னரோ பிறந்திருக்க வேண்டும். உங்கள் பெயரை கீழே கொடுக்கப்பட்டுள்ள லிங்கின் மூலம் பதிவு செய்யவும், பதிவு செய்ய கடைசி நாள் 12.11.2025 புதன்கிழமை https://forms.gle/VvQbmyo9Uua2Ey3d9 தூத்துக்குடி மாவட்டத்திற்கு உட்பட்ட கல்லூரிகளில் படிக்கும் மாணவர்கள் மற்றும் தூத்துக்குடி மாவட்ட த்திற்குள் பிறந்த எந்த வீரரும் பங்கு பெறலாம். வீரர்கள் கிரிக்கெட் உடை (whites, shoes) மற்றும் விளையாட்டு உபகரணங்கள் அணிந்து தேர்வில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளபடுகிறார்கள். மேலும் விவரங்களுக்கு தூத்துக்குடி மாவட்ட கிரிக்கெட் சங்க செயளாலர் கிறிஸ்பின் ( 80156 21154 ) இணை செயளாலர்சுப்ரமணியன் (87540 04377) துணை செயலாளர் சாமுவேல் ராஜ் ( 99448 33333 ) இந்த எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என தெரிவிக்கப் பட்டுள்ளது.

# ஆம்பூர் தேசிய நெடுஞ்சாலை மேம்பாலத்தின் மீது முன்னால் சென்ற லாரி மீது கார் மோதி விபத்து!

## அதிர்ஷ்டவசமாக வழக்கறிஞர் குடும்பத்தினர் காயங்களுடன் உயிர் தப்பினர்!!



ஆம்பூர்.நவ.10

திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் தேசிய நெடுஞ்சாலை மேம்பாலத்தின் மீது முன்னால் சென்ற லாரி மீது கார் மோதி விபத்துக்குள்ளானது. இதில் காரில் பயணம் செய்த வழக்கறிஞர் மற்றும் அவரது குடும்பத்தினர் அதிர்ஷ்டவசமாக காயங்களுடன் உயிர் தப்பினர்.

கர்நாடக மாநிலம் பெங்களூரு பகுதியை சேர்ந்தவர் வழக்கறிஞர் பிரவீன். இவர் தனது குடும்பத்தினருடன், சென்னை நோக்கி காரில் சென்றுக்

கொண்டிருந்த போது, கார் திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூரில் உள்ள சென்னை பெங்களூர் தேசிய நெடுஞ்சாலை மேம்பாலத்தில் சென்று கொண்டிருந்த போது திடீரென ஓட்டுனரின் கட்டுப்பாட்டை இழந்த கார் சாலையில் முன்னால் சென்றுக்கொண்டிருந்த லாரி மீது மோதி விபத்துக்குள்ளானது.

இதில் காரில் பயணம் செய்த பிரவீன், அவரது மனைவி மற்றும் 3 குழந்தைகள் காயம் அடைந்தனர்.

இதனை தொடர்ந்து பகுதி மக்கள் காயம் அடைந்தவர்களை மீட்டு சிகிச்சைக்காக ஆம்பூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற நகர போலீஸார் விபத்துக்குள்ளான காரை சாலையில் இருந்து அப்புறப்படுத்தி போக்குவரத்து சீர் செய்தனர்.

பின்னர் சம்பவம் குறித்து வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# தமிழ் மாநில பகுஜன் சமாஜ் கட்சி சார்பில் மத்திய மாவட்ட செயலாளர் தலைமையில் மறைமலைநகரில் ஆர்ப்பாட்டம்!

செங்கல்பட்டு, நவ.10

செங்கல்பட்டு அடுத்த மறைமலைநகர் பாவேந்தர் சாலையில்"நீதி வேண்டும் ஜெய் பீம் கோஷத்துடன் நீதி வெல்லும்" என்றுபகுஜன் சமாஜ் கட்சி தலைவர் ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கு ஆவணங்களை உயர்நீதிமன்றம் மற்றும் உச்சநீதி மன்றமும் சி பி ஐ யிடம் உடனடியாக ஒப்படைக்க வேண்டும் என்று உத்தரவிட்டும் கொலை வழக்கு ஆவணங்களை சி பி ஐ இடம் ஒப்படைக்காமல் அலட்சியம் காட்டி கொலை குற்றவாளிகளை தப்ப வைக்க முயற்சி செய்யும் தமிழக அரசையும் காவல் துறையையும் கண்டித்து மறைமலைநகர் பாவேந்தர் சாலையில் தமிழ் மாநில பகுஜன் சமாஜ் கட்சியின்தலைவர்திருமதி ஆம்ஸ்ட்ராங் ஆணைக்கிணங்க மாநில செயலாளர் செய்யூர் ஜெகன் அறிவுறுத்தலின்படி செங்கல்பட்டு மத்திய மாவட்ட செயலாளர்படூர் ஆறுமுகம் தலைமையில் கொட்டும் மழையிலும் ஜெய் பீம் என்று நீதி கேட்டு பகுஜன் சமாஜ் கட்சியினர்கோஷங்கள் எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் அவைத் தலைவர் மல்லை ஆனந்த் மாவட்டத் துணைச் செயலாளர் கிருஷ்ணகுமார், நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் மாவட்ட துணை செயலாளர் ஜெயந்தி மற்றும் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட வழக்கறிஞர் பிரபாகரன் கண்டன உரையாற்றினார். காட்டாங்குளத்தூர் ஒன்றிய பொருளாளர் அருண், பகுஜன் சமாஜ் கட்சியின் மாநில மாவட்ட ஒன்றிய நகர நிர்வாகிகள் மற்றும் மகளிர் அணியினர் நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு பகுஜன்சமாஜ்கட்சிதலைவர்ஆம்ஸ்ட்ராங்படுகொலையை செய்யப்பட்ட குற்றவாளிகளை தண்டனை வழங்க கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# திருச்செந்தூர் : பவுர்ணமி இரவுகளில் இனி தங்க தடை!

திருச்செந்தூர், நவ.10

அறுபடை வீடுகளில் இரண்டாவது படைவீடாக விளங்கும் திருச்செந்தூர் சுப்பிரமணியசுவாமி திருத்தலம், ஆன்மீக மகிமையும் கடற்கரை அழகும் ஒன்றிணைந்த திவ்ய தலமாகத் திகழ்கிறது.

இந்த கோவிலில் சமீப காலமாக ஒவ்வொரு மாதமும் பவுர்ணமி இரவில் திருச்செந்தூர் கடற்கரையில்நிலவொளியில்தங்கி, மறுநாள்அதிகாலை புனித நீராடி சாமி தரிசனம் செய்தால் வாழ்க்கையில் அபரிமித பலன்கள் கிடைக்கும் என்ற நம்பிக்கை பரவி, பவுர்ணமி இரவுகளில் கடற்கரை மக்கள் கூட்டத்தில் நெரிசலாகி வருகின்றது.

ஆனால்சமீபத்தில்இந்த கூட்ட நெரிசலைப் பயன்படுத்தி திருட்டு சம்பவங்கள், பொருட்கள் காணாமற்போனது போன்ற புகார்கள் அதிகரித்துள்ளதால், பக்தர்கள் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக கோவில் நிர்வாகம் புதிய உத்தரவை பிறப்பித்துள்ளது.

அதன்படி, இன்று முதல் இரவு 10 மணி முதல் அதிகாலை 4 மணி வரை திருச்செந்தூர் கடற்கரையில் யாரும் தங்க அனுமதி இல்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கோவில் பணியாளர்கள், காவல்துறை, கடலோர பாதுகாப்பு குழுவினர் இணைந்து கடற்கரை பகுதியில் தங்கி இருந்த பக்தர்களை அப்புறப்படுத்தினர்.

மேலும் ஒலிபெருக்கி மூலம் அறிவிப்பு வழங்கப்பட்டு, பக்தர்கள் கடற்கரைக்கு பதிலாக கோவில் வளாகம் மற்றும் அருகிலுள்ள மண்டபங்களில் தங்குமாறு அறிவுறுத்தப்பட்டனர்.

தற்போது அய்யா கோவில் வரை 500 மீட்டர் சுற்றளவில் கடற்கரை முழுவதும் காவல்துறை கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

# தூத்துக்குடியில் மகிளா காங்கிரஸ் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்!

தூத்துக்குடி நவ.10

தூத்துக்குடி கோவை கல்லூரி மாணவி கூட்டு பாலியல் வன்கொடுமை மற்றும் பெண்களுக்கு எதிராக அதிகரித்து வரும் பாலியல் துன்புறுத்தலை கண்டித்து தூத்துக்குடி மாவட்ட மகிளா காங்கிரஸ் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு உமா மகேஸ்வரி தலைமை வகித்தார்;, தனலட்சுமி இசக்கியம்மாள் லட்சுமி ஆகியோர்கள் முன்னிலை வகித்தனர். தமிழ்நாடு ஐ.என்.டி.யூ.சி மாநில பொதுச் செயலாளர்; பெருமாள் சாமி கண்டன உரையாற்றினார். ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் எஸ்.சிஇ எஸ.;டி பிரிவு மாவட்ட தலைவர் ராஜாராம் தெற்குமண்டலதலைவர் தங்கராஜ், விவசாய அணி பேரையா சுந்தர்ராஜ், சுரேஷ்குமார், வழக்கறிஞர் செல்வம், சேகர், முருகேசன், ஐ.என்.டி.யூ.சி சார்ந்த மனோகரன்,சிவலிங்கம், முத்து ரமேஷ், சாரதி, பாலன், கிரிதரன், ஜெய்சிங், தியாகு, துரை திவாகர், விஜய், உள்பட பலர் கலந்து கொண்டனர்; மாவட்ட பொது செயலாளர் இக்னேஷியஸ் நன்றி உரையாற்றினார்.

# நீச்சல் தெரியாமல் 19 வயது மாணவி, அவரது சித்தப்பா ஆற்று நீரில் அடித்துச் செல்லப்பட்டனர்!



திருப்பூர்,நவ.10

தாராபுரத்தை அடுத்துள்ள செலாம்பாளையம் அமராவதி ஆறு அணைக்கட்டு பகுதியில்

12 பேர்குளிக்கச் சென்ற நிலையில் நீச்சல் தெரியாமல் 19 வயது மாணவி மற்றும் அவரது சித்தப்பா ஆகிய இருவர் ஆற்று நீரில் அடித்துச் செல்லப்பட்டது அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

அப்பகுதி மக்கள் தீயணைப்புத்துறையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த தீயணைப்புத் துறையினர் இருவரையும் மீட்டு தாராபுரம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும் தாராபுரம் காவல்துறையினர் வழக்குபதிந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.



இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியில் புதியதாக நியமிக்கப்பட்ட பொறுப்பாளர்கள் அரூர் நகசெயலாளர் சஜீர் தலைமையில் அக்ரஹாரத்தில் உள்ள முதியோர் இல்லத்தில் உணவுகள் வழங்கினார்கள்.



நாமக்கல் மாவட்டம் ராசிபுரத்தில் உள்ள நகராட்சி நடுநிலைப்பள்ளியில் நடந்த திருக்குறள் தேர்வில் கலந்து கொண்ட மாணவ, மாணவிகளுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது.

## துளிர் திறனறிதல் தேர்வு:

# ஆத்தூர் மாணவர் மாநில அளவில் 4-ம் இடம் பிடித்து சாதனை!

தம்மம்பட்டி,நவ.10

தமிழ்நாடு அறிவியல் இயக்கம் சார்பில், மாணவர்களிடையே அறிவியல் கண்ணோட்டத்தை அதிகப்படுத்தும் வகையில்



ஆண்டுதோறும் துளிர் திறனறிதல் தேர்வை நடத்தி வருகிறது. இது பல்வேறு போட்டித் தேர்வுகளை மாணவர்கள் எதிர்கொள்ளும் வகையிலும், பயிற்சி பெறும் வகையிலும் நடத்தப்பட்டு வருகிறது. பெரும்பாலான வினாக்கள் மாணவர்கள் சிந்திக்கும் திறனையும், காரண காரியங்களை அறியும் திறனையும், சோதிக்கும் வகையிலும் அமைந்திருக்கும். தேர்வில் சிறப்பிடம் பெற்றவர்களுக்கு, மாநில அளவிலான பாராட்டுச் சான்றிதழ்வழங்கப்படும்.மாநில அளவில் சிறப்பிடம் பெறும் குழந்தைகள், மாநில அளவில் அறிவியல் சுற்றுலா,அறிவியல் மாநாடு மற்றும் அறிவியல் அறிஞர்களுடன் கலந்துரையாடல் ஆகியவற்றிற்கு அழைத்துச் செல்லப்படுவர்.

அச்சமயம், மாநில அளவில் சிறப்பிடம் பெற்ற மாணவர்களுக்கு பாராட்டு சான்றிதழும் கேடயமும் பதக்கமும் வழங்கப்படும் .இந்த வகையில்,கடந்த ஆண்டு நடைபெற்றதுளிர்திறனறிதல் தேர்வில்,சேலம் மாவட்டத்தில் மொத்தம் 3,079 பேர் பங்கேற்றனர். அவர்களில் இருந்து 8 பேர் மாநில அளவில் தேர்வு செய்யப்பட்டு, கோவை மாவட்டம், தனியார் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற, இரு நாட்களுக்கான துளிர் ஐந்தர் மந்தர் அறிவியல் திருவிழாவில் பங்கேற்றனர். தேர்வுபெற்ற மாணவர்கள், மத்திய அரசின் புகழ்பெற்ற நுண்ணுயிரியல் அறிவியல் அறிஞர் அசோக்குமாருடன் கலந்துகொண்டு மாணவர்களிடம் கலந்துரையாடினர். இதில், ஆத்தூர் வட்டாரத்தை சார்ந்த எட்டாம் வகுப்பு மாணவர்

ஆதித்தியன், சென்ற ஆண்டு எழுதிய துளிர் தேர்வில் பங்கேற்றார். தற்போது ஆத்தூர்,அம்மம்பாளையம் தனியார் மேல்நிலைப் பள்ளியில் ஒன்பதாம் வகுப்பு படித்து வருகிறார்.

மேலும், அவர் திறனறி தேர்வில் 99/100 மதிப்பெண்கள் பெற்று, மாநிலத்தில் நான்காம் இடம் பெற்று பெருமை சேர்த்துள்ளார். இத்தேர்வை, தமிழ்நாடு முழுவதும் அனைத்து அரசு மற்றும் தனியார் பள்ளிகளைச் சார்ந்த 3 லட்சம் மாணவ, மாணவிகள் எழுதியது குறிப்பிடத்தக்கது.

## கிருஷ்ணகிரியில்

# கல்லூரி மாணவர்களுக்கு பேச்சுப் போட்டி!

## 12, 13—ம் தேதிகளில் நடக்கிறது!!

கிருஷ்ணகிரி, நவ.10—

கிருஷ்ணகிரியில் வருகிற 12 மற்றும் 13ம் தேதிகளில் காந்தி, நேரு ஆகியோரின் பிறந்த நாளையொட்டி பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு பேச்சுப் போட்டிகள் நடைபெறவுள்ளது.

இது குறித்து மாவட்ட கலெக்டர் தினேஷ்குமார் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியி ருப்பதாவது:—

தமிழ்நாடு அரசு, தமிழ் வளர்ச்சித்துறையின் 2021&22ம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் அறிவிப்பிற்கிணங்க, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மகாத்மா காந்தி, ஜவகர்லால் நேரு ஆகியோரின் பிறந்தநாளையொட்டி, பேச்சுப் போட்டிகள் முறையே வருகிற 12ம் தேதி மற்றும் 13ம் தேதிகளில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு கிருஷ்ணகிரி மாவட்ட கலெக்டர் அலுவலகக் கூட்ட அரங்களில் காலை 9.30 மணி முதல் நடைபெற உள்ளது. மகாத்மா காந்தி பிறந்த நாள் பேச்சுப் போட்டிகளில் பள்ளி மாணவர்களுக்கான தலைப்பு, 1.காந்தி யடிகளின் வாழ்க்கைச் சுவடுகள். 2.வாய்மையே வெல்லும். 3.தீண்டாமையும், காந்தியடிகளும். கல்லூரி மாணவர்களுக்கான தலைப்பு, 1.வாழ்விக்க வந்த எம்மான். 2.அண்ணல் காந்தியடிகளின் அரசியல் வேள்வி. 3.தில்லையடி வள்ளியம்மையும், காந்தியடிகளும்.

ஜவகர்லால் நேரு பிறந்த நாள் பேச்சுப் போட்டியில், பள்ளி மாணவர்களுக்கான தலைப்பு. 1.ஜவகர்லால் நேருவின் சாதனைகள். 2.விடுதலை போரில் நேருவின் பங்களிப்பு. 3.அமைதிப் புறா & நேரு. கல்லூரி மாணவர்களுக்கான தலைப்பு. 1.நவீன இந்தியாவின் சிற்பி. 2. நேரு பதித்த சுவடுகள். 3.நேருவின் வெளியுறவுக் கொள்கை. பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கான பேச்சுப் போட்டியில் கலந்துகொண்டு வெற்றி பெறும் மாணவர்களுக்கு மாவட்ட அளவில் முதல் பரிசாக ரூ.5 ஆயிரம், இரண்டாம் பரிசாக ரூ.3 ஆயிரம், மூன்றாம் பரிசாக ரூ.2 ஆயிரம் மற்றும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்படும். மேலும், அரசுப் பள்ளி மாணவர்கள் இருவருக்கு சிறப்புப் பரிசுத் தொகை ரூ.2 ஆயிரம் வீதம் வழங்கப்படும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# மாணவர்களுக்கு யோகாசன போட்டி!

நாமக்கல், நவ.10

நாமக்கல்லில் தமிழ்நாடு தொழில் முறை தகுதி பதிவு பெற்ற யோக ஆசிரியர் நலச் சங்கம் சார்பில் யோகா போட்டி நடைபெற்றது.

பொது மற்றும் சிறப்பு பிரிவில் ஐந்து வயது முதல் 17 வயது வரை உள்ள மாணவ —மாணவிகள் மொத்தம் ஆயிரத்து 500 நபர்கள் பங்கேற்றனர் காலபைரவாசனம். அகர்ண தனுராசனம். சலபாசனம்.

கண்ட பின்டாசனம். அஞ்சலி ஆசனம் போன்ற ஆசனங்கள் உடலினை வில்லாக வளைத்து தங்களது திறமைகளை வெளிப்படுத்தினர்.

போட்டியில் பங்கேற்ற பள்ளி குழந்தைகளுக்கு சான்றிதழ் மற்றும் மெடல்கள் வழங்கி பாராட்டினர்.

## கோவையில்

# டிவிஎஸ் ஆர்பிட்டர் மின்சார வாகனம் அறிமுகம்!

கோவை, நவ.10

இரு சக்கர மற்றும் மூன்று சக்கர வாகனப் பிரிவுகளில் உலகளாவிய முன்னணி நிறுவனமான டிவிஎஸ் மோட்டார் நிறுவனம் தனது புதிய மின்சார வாகனமான டிவிஎஸ் ஆர்பிட்டர் ஐ தமிழ்நாட்டில் அறிமுகப்படுத்துகிறது. தமிழ்நாட்டில் கோவையில் நடைபெற்ற



டிவிஎஸ் ஆர்பிட்டரை அறிமுகப்படுத்திய நிகழ்ச்சியில் டிவிஎஸ் மோட்டார் நிறுவனத்தின் மார்க்கெட்டிங் ஈவி பிசினஸ் டிஜிஎம். ரிஷு குமார் கலந்து கொண்டு அறிமுகப்படுத்தி பேசினார் .

அன்றாட பயணத்தை மறுவரையறை செய்யும் வகையில் வடிவமைக்கப்பட்டிருக்கும் டிவிஎஸ் ஆர்பிட்டர் ஒரு முறை சார்ஜ் செய்தால் 158 கிமீ வரை பயணிக்கக்கூடிய ஐடிசி வரம்பை அளிக்கிறது. மேலுன் க்ரூஸ் கண்ட்ரோல், 34லிட்டர் பூட் ஸ்பேஸ், ஹில் ஹோல்ட் அசிஸ்ட் மற்றும்மேம்பட்ட இணைப்பு தொழில்நுட்ப அம்சங்கள் என இவ்வாகனப் பிரிவிலேயே முதல் அம்சங்களை அதிகம் வழங்குகிறது.

மேலும், இருசக்கர வாகன தொழில்துறையில் முதல் முறையாக 14” முன் சக்கரத்துடன் டிவிஎஸ் ஆர்பிட்டர் அறிமுகமாகியுள்ளது. இதன் விலை ரூபா ய்.1,03,100 (எக்ஸ் ஷோரூம், பிஎம் இடிரைவ் திட்டம் திட்டம் உட்பட) என்ற கவர்ச்சிகரமான விலையில் மேம்பட்ட வசதி மற்றும் அபாரமான செயல்திறனை வழங்குகிறது.

## உலக நீரிழிவு தினம்:

# ரத்த சர்க்கரை அளவை கட்டுக்குள் வைத்திருக்கும் கலிபோர்னியா பாதாம்!

கோவை ,நவ.10

ஆண்டுதோறும் நவம்பர்14ந்தேதி உலக



நீரிழிவு தினமாக கடைபிடிக்கப்படுகிறது.

நீரிழிவு நோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படு த்துவதையும், நீரிழிவால் பாதிக்கப்பட்டு உள்ளவர்களுக்கு சிகிச்சையின் முக்கியத்துவத்தை யும் வலியுறுத்தும் வகையில் இந்த தினம் கடைபிடிக்கப்படுகிறது. முதலாளி கள் மற்றும் ஊழியர்கள் இருவரும் நீரிழிவு நோய் குறித்து நன்கு புரிந்துகொ ள்ளவும், பணியிடத்தில் பயனுள்ள மேலாண்மைக்கு ஆதரவான சூழல்களை உருவாக்கவும் ஊக்குவிக்கும் வகையில் இந்த ஆண்டு "பணியிடத்தில் நீரிழிவு" என்னும் தலைப்பில் நடைபெறுகிறது. இன்றைய பரபரப்பான இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் நடத்திய சமீபத்திய ஆய்வில், 10 கோடி இந்தியர்களுக்கு நீரிழிவு நோய் இருப்பதாகவும், மேலும் 13.6 கோடி பேர் நீரிழிவு நோய்க்கு முந்தைய நிலையில் இருப்பதாகவும் தெரிய வந்திருக்கிறது.எனவே ரத்த சர்க்கரை அளவைப் பராமரிப்பதில் சீரான உணவு முக்கிய பங்கு வகிக்கிறது, மேலும் ஊட்டச்சத்து நிறைந்த உணவுகளுடன் ஒவ்வொரு நாளையும் தொடங்குவது என்பது பெரியதொரு மாற்றத்தை ஏற்படு த்தும். புரதம், நிறைவுறா கொழுப்புகள் மற்றும் உணவு நார்ச்சத்து உள்ளிட்ட 15 அத்தியாவசிய ஊட்டச்சத்துக்கள் நிறை ந்த பாதாமுடன் உங்கள் நாளைத் தொடங்குவது, ஆரோக்கியமான ரத்த சர்க்கரை ஒழுங்குமுறையை ஆதரிக்க உதவும்.



செங்கல்பட்டு, அகில இந்திய அனைத்து ஆசிரியர்கள் சங்கத்தின் சார்பாக செங்கல்பட்டு மாவட்ட முதன்மை கல்வி அலுவலராக பொறுப்பேற்றுள்ள திருவளர் செல்வி, மாநிலத் தலைவர் தயாளன், மாநில பொதுச் செயலாளர் பத்மநாபன், மாநில செய்தி தொடர்பாளர் வினோத், மாநிலத் துணைத் தலைவர் முனைவர் வெற்றிவேந்தன் ஆகியோர் சந்தித்து வாழ்த்துக்கள் தெரிவித்தனர்.

## பாலக்கோடு அருகே

# அரசு பள்ளியில் கம்ப்யூட்டர் திருடிய 5 பேர் கைது!

பாலக்கோடு.நவ.10—

தர்மபுரி மாவட்டம், பாலக்கோடு அடுத்த சோமனஅள்ளி அரசு மேல்நிலைப் பள்ளியில் 6 ம் வகுப்பு முதல் 12 ம் வகுப்பு



வரை சுமார் 600க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயின்று வருகின்றனர்.

இப்பள்ளியின் தலைமை ஆசிரியராக பணியாற்றி வருபவர் வெங்கடேசன் (54) இவர் கடந்த 1ம் தேதி சனிக்கிழமையன்று பள்ளி முடிந்து மாலை தலைமை ஆசிரியர் அறையை பூட்டி விட்டு சென்றார்.

திங்கட்கிழமை காலை பார்த்த போது தலைமை ஆசிரியரின் அறையின் கதவு உடைக்கப்பட்டு 30 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள கம்ப்யூட்டர், 10 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள பிரிண்டர் மற்றும் மைக்செட் உள்ளிட்ட மொத்தம் 40 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள பொரு ட்களை மர்ம நபர்கள் திருடி சென்றது தெரிய வந்தது. இது குறித்து பாலக்கோடு போலீசார் வழக்கு தீவிர பதிவு விசாரணை மேற்கொண்டு வந்த நிலையில் தர்மபுரி அடுத்த மொடக்கேறி கிராமத்தை சேர்ந்த யாககுமார் (20), பாப்பாரப்பட்டி அடுத்த கிட்டம்ப ட்டியை சேர்ந்த பரத் கு மார் (19), செக்கோடியை சேர்ந்த பார்த்தசாரதி (20), சஜ்ஜலஅள்ளியை சேர்ந்த ரமேஷ் (19), பாடியை சேர்ந்த 17 வயது சிறுவன்உள்ளிட்ட 5 பேரை போலீசார் கைது செய்து விசாரணை செய்ததில் திருட்டு சம்பவத்தில் ஈடுபட்டது தெரிய வந்தது.


